DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.6

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.சுமதி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 03rd day of February, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது நல்லமநாயக்கன்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். 2023 ம் ஆண்டு இராஜபாளையம் தாலுகா, சம்பந்தபுரம் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். அப்போது எனது உதவியாளராக முகமது ரபிக் என்பவர் பணியாற்றினார்.

கடந்த 23.07.2023 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு நானும் எனது உதவியாளரும் சம்பந்தபுரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியில் இருந்தோம். அப்போது கார்த்தீஸ்வரன் என்பவர் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார். அவர் என்னிடம் அதற்கு முந்தைய தினம் இரவு 10.00 மணிக்கு மேல் அவரது தெருவைச்சேர்ந்த ராயப்பன் என்பவரது தலையில் தான் டிவி பிக்சர் டியூபை தூக்கிப்போட்டு கொலை செய்துவிட்டதாக சொன்னார். நான் கார்த்தீஸ்வரன் சொன்ன விசயங்களை வாக்குமூலமாக எழுதிக்கொண்டேன். மேற்படி கார்த்தீஸ்வரன் நீதிமன்றத்தில் உள்ளாரா என்றால் ஆஜர் எதிரி தான் அவர்.

பின்னர் அவரை இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்திற்கு

அழைத்து சென்று அவரை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அப்போது ஆஜர் எதிரி என் முன்னிலையில் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை இந்திரா காலனியில் உள்ள பாலத்திற்கு அழைத்து சென்றால் கொலைக்கு பயன்படுத்திய டிவி பிக்சர் டியூப்பை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். மேலும் சமத்துவபுரம் பாலத்திற்கு அழைத்து சென்றால் கொலை சம்பவத்தின்போது தான் அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த உடைகளை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ 7** ஆகும்.

அதனடிப்படையில் ஆய்வாளர் எங்களுடன் ஆஜர் எதிரியை முதலில் இந்திரா காலனியில் அமைந்துள்ள எதிரி சொன்ன பாலத்திற்கு மதியம் சுமார் 3.00 மணியளவில் அழைத்து சென்றார். அங்கு ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த கொலைக்கு பயன்படுத்திய டிவி பிக்சர் டியூப்பை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். எதிரி எடுத்து ஆஜர் செய்த டிவி பிக்சர் டியூபை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கிராம உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த **அத்தாட்சி அசாஆ 8** ஆகும். அத்தாட்சியின் பேரில் கைப்பற்றப்பட்ட டிவி பிக்சர் டியூப்பை என்னால் அடையாளம் காண்பிக்கப்பட்டது.

பின்னர் சமத்துவபுரம் பாலம் அருகில் எதிரியை எங்களுடன் அழைத்து சென்றபோது எதிரி பாலத்தின் அடியில் மறைத்து வைத்திருந்த இரத்தக்கறை படிந்த அவரது ஆடைகளை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை காவல் ஆய்வாளர் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த **அத்தாட்சி அசாஆ 9** ஆகும். அந்த அத்தாட்சியின் பேரில் கைப்பற்றப்பட்ட இரத்தக்கறை படிந்த

ரோஸ்கலரில் வெள்ளைக்கலர் பார்டர் போட்ட **வேஷ்டி சா.பொ.3** ஆகும். இரத்தக்கறை படிந்த Phoenix shirts என்ற லேபிள் தைக்கப்பட்ட வெள்ளை கலரில் புளூ கலர் டிசைன் போட்ட முழுக்கை சட்டை –1 **சா.பொ. 4** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

பொதுவாக நான் எங்கள் அலுவலகத்தில் எனது கிராம நிர்வாக அலுவலரின் பணி சம்பந்தமான கையேடு பராமரிப்பது அவசியம் என்றால் சரிதான். தினமும் எங்கள் வேலை அலுவல் சம்பந்தமான முக்கியமான நடவடிக்கை ஏதேனும் இருப்பின் அதனை எங்கள் பணி பதிவேட்டில் பதிவு செய்தும், அந்த நடவடிக்கைகள் குறித்து ஒரு நகலை தாசில்தார் அவர்களுக்கும், மற்றொரு நகலை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான்.

சம்பந்தபுரம் கிராம நிர்வாக அலுவலகம் இராஜபாளையம் தெற்கு காவல் நிலைய எல்கைக்கு உட்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்னிடம் ஆஜர் ஆனபோது அவருடைய அடையாளம் குறித்த ஆவணங்கள் எதையும் அவர் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்னிடம் ஆஜரானவுடன் உடனடியாக நான் எனது அலுவலகத்திலிருந்தே காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்பதையும் நான் அவருக்கு அறிவுறுத்தினேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை நான் எனது கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். நான் எழுதிய ஒப்புதல் வாக்குமூலத்தினை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

நான் எனது கைப்பட எழுதிய மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை சம்பந்தப்பட்ட தாசில்தார் அவர்களுக்கோ, மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கோ அதனுடைய ஒரு நகலை அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரி எனது

முன்னிலையில் ஆஜராக எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதனை நான் எனது கைப்பட எழுதவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு கொடுத்திருந்தால் அதனை சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றாலும் எதிரி என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்காததால் தான் அதனை நான் காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

எதிரி கொலைக்கு பயன்படுத்தியதாக கூறப்படும் பிக்சர் டியூபை மறைத்து வைத்திருந்ததாக கூறப்படும் பகுதி அதிகமான மக்கள் நடமாட்டம் இருக்கும் பகுதி என்றால் சரிதான். பாலத்தின் இருபுறமும் குப்பைகள் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். பிக்சர் டியூப்பை கைப்பற்றும்போது அங்கு இருந்த பொதுமக்கள் யாரையும் சாட்சியாக இருக்குமாறு ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

சமத்துவபுரத்தில் உள்ள பாலத்திற்கு எதிரியை அழைத்து சென்று வழக்கு சொத்துக்களை கைப்பற்றும்போது அங்கிருந்த பொதுமக்கள் யாரையும் சாட்சியாக இருக்குமாறு ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் பின்னிட்டு வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்றாலும் அவற்றில் நான் அரசு அலுவலர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போன்று சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றாலும் அதனால் தான் அங்கிருந்த பொதுமக்களை சாட்சியாக அழைக்கவில்லை என்றாலும் சரியல்ல.

எதிரி உண்மையில் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருந்தால் எங்கள் எல்கைக்கு உட்பட்ட காவல் நிலையத்திற்கு எதிரியை அழைத்து சென்று ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் வசம் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு இல்லாததால் தான் பின்னிட்டு காவல் ஆய்வாளர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் எதிரியை ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.